


**04. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி வெனிசுலாவின் தற்காலிக அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் உடன் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

2. பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர்
திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. மேட்டூர் அணை திறப்பு குறித்து முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய், அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் இன்று ஆலோசித்தார்.

4. காற்றாலைகளில் பிரச்சனைகள் காரணமாக தமிழகத்தில் மின் தடைகள் ஏற்படுவதாக மாநில மின்துறை அமைச்சர்
திரு. C.T.R. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

5. இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அம்சகருணன் அர்ஜுன் இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

## பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெனிசுலாவின் தற்காலிக அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் உடன் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

எரிசக்தி பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, மருந்தியல், சுகாதாரம், போக்குவரத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகளில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

5 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள வெனிசுலா அதிபருடன் அமைச்சர்கள் குழுவும் வந்துள்ளது.

இந்தியாவின் தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை திறன்களை அறிந்து கொள்வதற்கும், ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும், பல்வேறு இடங்களை இக்குழு பார்வையிட உள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் வெனிசுலாவின் எரிசக்தி துறையில் குறிப்பிடத்தக்க முதலீடுகளை செய்துள்ள நிலையில், வெனிசுலா அதிபரின் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

முன்னதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருடன் வெனிசுலா அதிபர் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

## பிரதமர் யோகா

பிரதமர் திரு. நரேந்திரமோடி குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் இன்றுமாலை தொடங்கும் முதலாவது உலக யோகாசனா விளையாட்டு சாம்பியன்பட்ட போட்டியில் காணொலி மூலம் பங்கேற்கிறார்.

உலகம் முழுவதிலுமிருந்து யோகக்கலை வல்லுநர்கள் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளதாகவும், அனைத்து நாடுகளிலும் யோகா மிகவும் பிரபலமடைந்துள்ளதாகவும் பிரதமர் சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

இதனிடையே குஜராத் மற்றும் டாமனில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் நாளை தொடங்கி வைக்கிறார்.

சூரத்தில் 18 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் இதில் அடங்கும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படைகளுக்கான நிதி அதிகார பகிர்வை இன்று வெளியிட்டு பேசியஅவர், விரைவான முடிவெடுப்பதற்கு இது வழிகோலும் என்றார்.

குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் உள்நாட்டு மயமாக்கலை ஆதரிப்பதில் இது பெரும் பங்கு வகிக்கும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், கர்நாடக மாநிலம் யாத்கிரியில், வேளாண் பயிற்சி மையத்தை இன்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், வேளாண் தொழிலை மேம்படுத்தும் வகையில் நிலத்தடி நீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

12 ஆண்டு சாதனை

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான சீரிய தொலைநோக்கு தலைமையில் கடந்த 12 ஆண்டுகளாக அனைவரும், அனைவருக்குமான வளர்ச்சி, நம்பிக்கை

என்ற கொள்கையின் அடிப்படையில் நாடு சிறப்பான வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகிறது.

பல்வேறு துறைகளில் மத்திய அரசு வளர்ச்சி முத்திரையை பதித்துள்ள நிலையில், இலகுவான வர்த்தகத்திற்கு மத்திய அரசின் உயர் முன்னுரிமை குறித்த சிறப்பு செய்தித் தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

நாட்டில் வர்த்தக ஒழுங்குமுறை சூழலை மேம்படுத்தும் வகையிலும் வர்த்தகத்தை எளிதாக்கும் வகையிலும், பல்வேறு தொடர் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சீர்த்திருத்தங்கள் முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளதோடு, தொழில் முனைவோரை ஊக்குவித்து உலகளாவிய நிலையில் இந்தியாவின் வர்த்தக நிலையை மேம்படுத்தியுள்ளது.

கடந்த 2016-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஸ்டார்ட் அப் இந்தியா முன்னெடுப்பு புத்தாக்கத்தை வளர்த்து முதலீடு சார்ந்த வளர்ச்சியை சாத்தியமாக்கி வருகிறது.

மத்திய அரசின் முயற்சிகளால் நடப்பாண்டு மார்ச் மாதத்தில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 23 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

2017-ம் ஆண்டு சரக்கு சேவை வரி அறிமுகப்படுத்தியதன் மூலம் மறைமுக வரி முறை மாற்றியமைக்கப்பட்டதுடன், டிஜிட்டல் உள் கட்டமைப்பு கொள்கை சீர்த்திருத்தம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வலிமையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

நம்நாட்டின் இலகுவான வர்த்தகத்திற்கான நெறிமுறைகளும், சீரிய முயற்சிகளும், தேசத்தின் ஒருங்கிணைந்த மின்னணு கட்டமைப்பை எடுத்துரைப்பதோடு

கொள்கை சீர்த்திருத்தங்கள் மற்றும் ஆட்சிமுறை மீதான நம்பகத்தன்மையை பறைசாற்றுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

## மேட்டூர் அணை

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணை திறப்பு குறித்து முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய், மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் மற்றும் அதிகாரிகளுடன் சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

வழக்கமாக மேட்டூர் அணை ஜுன் 12-ம் தேதி திறக்கப்படும் நிலையில் தற்போது அணையின் நீர்மட்டம் 77 அடியாக உள்ளதால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

தமிழ்நாட்டில் 18 ஆயிரத்து 600 கோடி ரூபாய் உறுதி அளிக்கப்பட்ட முதலீட்டில் 3 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையில் இன்று மேற்கொள்ளப்பட்டது.

L & T நிறுவனம் சார்பிலான இத்திட்டங்கள், காஞ்சிபுரம், கோவை, திருவள்ளூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தகவல் தரவு மைய விரிவாக்கத் திட்டம்,

கோவையில் இரண்டாயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டடில் மின்னணு பொருட்கள் மற்றும் மின்னணு அமைப்புகள் உற்பத்தி திட்டம்,

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆயிரத்து 100 கோடி ரூபாய் முதலீட்டில் கப்பல் கட்டும் தளம் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளன.

இந்த திட்டங்கள் மூலம் 8 ஆயிரத்து 200 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என அரசு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

அமைச்சரவை கூட்டம்

தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் தலைமையில் சென்னையில் நாளை நடைபெறுகிறது.

த.வெ.க. அரசு பொறுப்பேற்றப்பின் நடைபெறும் முதல் அமைச்சரவை கூட்டம் இதுவாகும்.

இக்கூட்டத்தில் நடப்பாண்டிற்கான முழுமையான பட்ஜெட், தேர்தல் வாக்குறுதிகள், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

நிர்மல் குமார்

தமிழ்நாட்டில் காற்றாலைகளில் ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக மின் தடைகள் ஏற்படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழ்நாடு மின்வாரிய தலைமையக அலுவலகத்தில் முக்கிய கோப்புகள் காணாமல் போயிருப்பதாகவும், ஒப்பந்த தொழிலாளர் நியமன முறைகேடு தொடர்பான ஹார்ட் டிஸ்குகள் இதில் அடங்கும் என்றார்.

இருக்கும் ஆவணங்களை முறையாக பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

காகிதம் அடிப்படையிலான நகல்கள் அனைத்தும் பாதுகாப்பாக இருந்தாலும், அனைத்து முக்கியமான மின்னணு ஆவணங்கள் மட்டும் காணாமல் போயிருப்பதாக கூறினார்.

இதுகுறித்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்மோகன்

தமிழகத்தில் முறைக்கேட்டில் ஈடுபடும் தனியார் பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கட்டண விவரங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தனியார் பள்ளிகள் குறித்த புகாரை தம்மிடமோ அல்லது மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியிடமோ தெரிவிக்கலாம் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பள்ளிகள் திறப்பு

தமிழ்நாட்டில் கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் இன்று மீண்டும் திறக்கப்பட்டன.

இந்நாளையொட்டி முதலமைச்சர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் புதிய நம்பிக்கையோடு, கல்வியாண்டை தொடங்கும் மாணவ செல்வங்களுக்கு வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளார்.

முதல்நாளில் பாடப்புத்தகம், சீருடை உள்ளிட்டவற்றை வழங்க அரசு ஏற்பாடுகளை செய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மாணாக்கருக்கு அரசின் விலையில்லா பாடப்புத்தகம், சீருடை உள்ளிட்டற்றை மாநில சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. மதன்ராஜா இன்று வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 524 பள்ளிகளில் காலை உணவு திட்டம் இன்று மீண்டும் தொடங்கிய ஆட்சித்தலைவர் திரு. ஸ்ரீகாந்த் உணவின் தரத்தை ஆய்வு செய்தார்.

நெல்லை மாவட்டத்தில் மாணாக்கர் இடைநிற்றலை தடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக

ஆட்சித்தலைவர் திரு. ஆனந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

பல்வேறு மாவட்டங்களில் பள்ளிக்கு உற்சாகத்துடன் வந்த மாணாக்கரை ஆசிரியர்கள் இன்முகத்துடன் வரவேற்றனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பள்ளிக்கு வரும் மாணாக்கர் செல்போன்களை எடுத்து வரக்கூடாது என்று காவல்துறை அறிவுறுத்தியது.

தொடக்க கல்வி மாணாக்கருக்கு ஆசிரியர்கள் ரோஜா பூ மற்றும் இனிப்புகள் வழங்கி வரவேற்றனர்.

வேலூர் மாவட்டம் கொணவட்டம் தொடக்கப் பள்ளியில் மாணாக்கருக்கு இசை முழங்க வரவேற்பளிக்கப்பட்டது.

திண்டுக்கல்லில் அரசு பள்ளி மாணாக்கருக்கு சந்தனம், குங்குமம் இட்டு இனிப்பு வழங்கி முதன்மை கல்வி அதிகாரி மற்றும் ஆசிரியர்கள் வரவேற்பு அளித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருச்சி வாய்ஸ்

தமிழ்நாட்டு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும வேளாண் பொறியியல் துறை சார்பில் கிராமப்புற இளைஞர்களுக்கான உதவி உழுவை ஓட்டுநர் 27 நாள் இலவச பயிற்சி திருச்சியில் நடைபெறவுள்ளதாக வேளாண் உதவி பொறியாளர் திரு. அசோகன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

நெல்லை

நெல்லை மாவட்டம் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த கனமழைக் காரணமாக களக்காடு தலையணை பகுதியில் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை தடை விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திண்டுக்கல் மாவட்டத்தில் பெண்களின் முன்னேற்றம் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று ஆட்சித்தலைவராக புதிதாக இன்று பொறுப்பேற்ற திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஜகார்த்தாவில் நடைபெறும் இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அம்சகருணன் அர்ஜுன் இணை – மலேஷிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர், ருத்விகா இணை களம்காண்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖